# சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி

**கள்ளக்குறிச்சி மாவட்டம்–606 201.**

**<u>ந.க.எண்.அ4/766/2021</u>** **<u>நாள்.28.03.2022</u>**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

சின்னசேலம் பேரூராட்சியில் **மாவட்ட ஆட்சியர் நிதி திட்டம் 2021–2022–ன் கீழ்,** கீழ்கண்டுள்ள வேலைகளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட அட்டவணை ஒப்பந்தப்புள்ளிகள் சின்னசேலம் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

அட்டவணை ஒப்பந்தப்புள்ளிகள் **13.04.2022**ம் தேதி **வியாழன் கிழமை** மாலை **3.00** மணி வரையில் சின்னசேலம் பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக் கொள்ளப்படும். பெறப்படும் அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்று மாலை **3.30** மணிக்கு பேரூராட்சி அலுவலகத்தில் திறந்து பரிசீலிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளி நமூனா பெற கடைசி நாள் & நேரம் | : | **12.04.2022** மாலை 3–00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி நாள் & நேரம் | : | **13.04.2022** மாலை 3–00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கப்படும் நாள் & நேரம் | : | **13.04.2022** மாலை 3–30 மணி |

### <u>நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தப்புள்ளியில் சின்னசேலம் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொள்ள தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

2. ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் ஒப்பந்ததாரரிடம் பணவரம்பு அளவுக்கு மட்டுமே வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் உரிய விண்ணப்பத்தின் பேரில் நமூனா ஒன்றுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் கண்டுள்ளவாறு தொகையினை ரொக்கமாக பேரூராட்சி அலுவலத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் **12.04.2022**ம் தேதி **புதன் செவ்வாய் கிழமை** மாலை 5.00 மணி வரையில் தொகையினை ரொக்கமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4. ஒப்பந்தப்புள்ளி வேலைக்கான டேவணித்தொகை ரசீது இணைக்கப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித் தொகையினை **13.04.2022**ம் தேதி **புதன் கிழமை** மாலை 3.00 மணி வரையில் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

5. டேவணித் தொகையை ரொக்கமாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் காசோலைகள், சேமிப்பு பத்திரங்கள் வடிவத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி என எழுதப்படுதல் வேண்டும்.

7. **13.04.2022**ம் தேதி **புதன் கிழமை** மாலை 3.00 மணிக்கு மேல் வரும் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியும் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. பட்டியல் விதிமுறைப்படி ரூ.10,000/–க்கு மேல் செய்யப்படும் வேலைகளுக்கு வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவைவரி (CGST & SGST) பிடித்தம் கண்டிப்பாக செய்யப்படும். மேலும் முடிவுற்ற பணிகளுக்கு வரப்படும் பட்டியலில் மதிப்பீட்டில் கூடுதல் டேவணித் தொகையாக 4% பிடித்தம் செய்யப்படும். இத்தொகை தணிக்கை முடிவுற்ற பின்னர் தான் வழங்கப்படும்.

9. பணி உத்திரவு வழங்கப்படும் போது 1% தொழிலாளர் நலன் நிதி தொகையினை வங்கி வரைவோலை மூலம் செலுத்திய பின்பே பணி உத்திரவு வழங்கப்படும்.

10. வேலைகள் அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும்.

11. வேலைகள் முழுமையாக முடிவு பெற்ற பின்னரே வேலைக்கான பட்டியல் தொகை வழங்கப்படும். பகுதி பட்டியல் தொகை வழங்கப்படமாட்டாது.

12. ஒப்பந்தப்புள்ளிகள் ஒவ்வொரு வேலைக்கும் இனவாரியாக கொடுத்துக் கொள்ளவேண்டும். இனவாரி ஒப்பந்தப்புள்ளி விபரத்தை எண்ணாலும், எழுத்தாலும் குறிக்கப்படவேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

14. ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்திரவு கிடைக்கப்பெற்றதும் ஒரு வாரத்திற்குள் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் செயல் அலுவலர் அவர்களால் தெரிவிக்கும் வண்ணம் ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

15. வேலை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் செய்ய தவறினால் அக்காலதாமத்திற்கு தண்ட தொகை விதிக்கவோ அல்லது ஒப்பந்தத்தை ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

16. வேலைகளுக்கு தேவையான தார், சிமெண்ட் மற்றும் கம்பிகள் ஒப்பந்ததாரர்கள் அவரவர் சொந்த செலவில் வாங்கி பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

17. செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கையில் தடை ஏதும் இல்லையென அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் செலுத்தப்பட்ட வேலைக்கான டேவணி 1 % மற்றும் கூடுதல் காப்பு வைப்புத் (ASD) தொகை 4% திருப்பி வழங்கப்படும்.

18. எவ்வித காரணமும் கூறாமலே மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

19. மதிப்பீட்டுத் தொகைக்கு விலைக்கு கூடுதலாக வேலையை செய்வதாக குறிப்பிடும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

20. இதர விபரங்கள் வேண்டுவோர் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் அலுவலகத்தில் நேரில் அணுகி தெரிந்து கொள்ளலாம்.

21. கீழ்காணும் விபரப்படியான பணிகளின் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 06.04.2022–ம் தேதி முதல் கீழ்கண்ட இணைய தளத்தில் இருந்து கட்டணம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம். மேற்படி படிவத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**https://tntenders.gov.in,**
**https://tenders.tn.gov.in**

**திட்டத்தின் பெயர்: மாவட்ட ஆட்சியர் நிதி திட்டம் 2021–2022**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி நமுனா ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் **மேற்கு பகுதியில்** ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளை செப்பனிட்டு தார்சாலையாக புதுப்பித்தல் பணி | 20.00 | 20,000/– | 6,750/– | 90 நாட்கள் |
| 2 | இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் **கிழக்கு பகுதியில்** ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளை செப்பனிட்டு தார்சாலையாக புதுப்பித்தல் பணி | 15.00 | 15,000/– | 6,750/– | 90 நாட்கள் |

**செயல் அலுவலர்,**
**சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி,**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்.**

**பெறுநர்**

சின்னசேலம் பேரூராட்சியின் அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்.

**நகல்:–**

1. மாவட்ட ஆட்சியர், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், (பேரூராட்சிகள்) கடலூர் மண்டலம், கடலூர்.
4. தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், சின்னசேலம் பேரூராட்சி மன்றம்.
5. உதவி பொறியாளர், சின்னசேலம் பேரூராட்சி.
6. செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை, கள்ளக்குறிச்சி.
7. செயற் பொறியாளர், நெடுஞ்சாலை துறை, கள்ளக்குறிச்சி.
8. கிராம நிர்வாக அலுவலர், சின்னசேலம் (வடக்கு / தெற்கு).
9. அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்,கள்ளக்குறிச்சி மாவட்டம்.
10. அலுவலக விளம்பர பலகைக்கு.